**தலைப்பு 263 – அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன மாவட்ட செயலகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்படுவார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையறைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 263 – அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூன் 21 ஆம் திகதி மாவட்டச் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.16 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) - கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும்/ அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. | பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.10 (i) |
| | | 2. | பெறுகை நடவடிக்கைகளை செயற்படுத்துவதில் குறைபாடுகள் | 2.4 |
| | | 3. | கடமைப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை | 2.3.1 (அ) |
| | | 4. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் அடைந்து கொள்ளப்படாமை | 2.3.1 (ஆ) |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன என்பதும் | | இணங்காமை | 2.13 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் பொறுப்பில் பேணப்படுகின்ற பணம், பொருட்கள், | | சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைபாடுகள் | 2.5 |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணம் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பேணிப் பாதுகாப்பதற்காக போதியளவும் முறையானதுமான ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படுதல், அவை காலத்துக்குக் காலம் மெய்மையாய்வு செய்யப்படுகின்றன என்பதுவும் அவை முறைப்படியாக அகற்றப்படுகையில் அவ்வாறு அகற்றப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இணங்க செய்யப்படுகின்றமை | | |
| 128(1)(ஏ) | நிலுவையாகக் காணப்பட்ட கட்டணங்கள் முதலியவற்றை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணம் தொடர்பாக அவற்றினை அறவீடு செய்வதனைத் துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய தரப்பினர்களால் பணிக்கப்பட்டவாறு தமக்கு அறிக்கையிடுதல் | 1. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளின் நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்தல் | 2.11 |
| | | 2. தனியார் நிறுவனத்திடமிருந்து பெறவேண்டிய தொகை | 2.8 |
| 128(1)(ஙு) | பிணை கட்டுவதற்கு ஆளாகிய உத்தியோகத்தர்கள் நடைமுறையில் உள்ள கட்டளைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க அவ்வாறு செய்கின்றனர் என்பதும் | குறித்த உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை பெற்றுக் கொள்வதில் குறைபாடுகள் | 2.16 |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமென்பதும் | 1. நட்டங்களும் சேதங்களும் | 2.6 |
| | | 2. முறைகேட்டுத் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் | 2.9 |
| | | 3. நிதியுடன் தொடர்புபடும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்கள் பெற்றுக் கொள்ளப்படாமை | 2.16 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பணிகள்

(அ) பிரதேச மற்றும் கிராமிய மட்டங்களில் பிரதேச செயலகங்களினால் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும் சட்டத்தால் ஒப்படைக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றலும், அதற்குரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் மற்றும் வருமானங்களைச் சேகரித்தல்.

(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் பிரதிநிதிகளாகச் செயற்பட்டு கொடுப்பனவுகளை மேற்கொள்ளலும் வருமானங்களைச் சேகரித்தலும்.

(இ) பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் அமுல்படுத்தலும் அதற்குரிய கொடுப்பனவுகளும்.

(ஈ) மாகாண சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளிற்காகத் தேவைப்படும் போது பங்குபற்றுதலும் அதில் செய்யப்பட வேண்டியவைகளான வருமானங்களைச் சேகரித்தலும் கொடுப்பனவு நடவடிக்கைகளும்.

### 2.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் அவற்றின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள்

அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்டுள்ள நிறுவனங்களும் அவற்றின் செயற்பாடுகளும் கீழே தரப்படுகின்றன.

| மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்கள் | தோற்றுவிக்கப்படுவதற்கான அதிகாரம் | செயற்பாடுகள் |
| --- | --- | --- |
| அம்பாந்தோட்டை<br>அம்பலாந்தோட்டை<br>திஸ்ஸமஹாராம<br>லுணுகம்வெஹெர<br>சூரியவெவ<br>தங்காலை<br>பெலியத்த<br>வீரகெட்டிய<br>ஓகெவெல<br>வலஸ்முல்ல<br>கட்டுவன<br>அங்குனுகொலபெலஸ்ஸ | 1992 இன் 58 ஆம் இலக்க அதிகார கையளிப்பு (பிரதேச செயலலாளர்களிற்கு) அதிகாரச்சட்டம் | மத்திய அரசாங்கத்தாலும் மாகாண சபைகளாலும் ஒப்படைக்கப்படுகின்ற நிர்வாக மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை பிரதேச மட்டத்தில் அமுல்படுத்துதல். |

### 2.3 செயலாற்றல்

#### 2.3.1 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

(அ) மீளாய்வாண்டின் போது 3 வெவ்வேறு வரிசை அமைச்சுக்களின் மூலம் 18 அபிவிருத்திச் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக 05 பிரதேச செயலகங்களிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 28,161,812 நிதியேற்பாடுகளிற்குரிய செயற்திட்டங்களை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் அமுல்ப்படுத்த முடியாதிருந்தமையால் அல்லது ஏனைய பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நிதியேற்பாடுகள் மீண்டும் திருப்பியனுப்பப்பட்டிருந்தன.

(ஆ) மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழ் வருகின்ற பிரதேச செயலகங்களினால் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030’’ தொடர்பாக அறிந்து

கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டிருக்காததுடன் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் அடைந்துகொள்ளப்படுவது தொடர்பாக மாவட்டச் செயலகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற்காக நிதியேற்பாட்டை ஒதுக்கீடு செய்தல் மற்றும் தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை இனங்காண்பதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல்**

2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.3 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட கேள்வி கோரலின் பெறுகை நடைமுறையானது கொள்வனவிற்காக குறித்த சில மூலங்கள் மாத்திரம் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது மாத்திரமே பின்பற்றப்பட முடியும். எவ்வாறாயினும் மாவட்டச் செயலகத்தினால் 2017 இன் இறுதி காலாண்டில் கணனிகள், கணனி உபபாகங்கள் மற்றும் ரப் இயந்திரங்கள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 16.93 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக தேசிய போட்டிக் கேள்வி கோரல் மேற்கொள்ளப்படாது அம்பலாந்தோட்டை, மாத்தறை மற்றும் கொழும்பு பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட 12 நிறுவனங்களிடமிருந்து வரையறுக்கப்பட்ட கேள்விகள் கோரப்பட்டிருந்தன.

**2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படாமை**

2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களிற்குச் சொந்தமான 15 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| செயலகம் | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|---|
| மாவட்டச் செயலகம் | முச்சக்கர வண்டி | 01 | 06 ஆண்டுகள் |
| தங்காலை பிரதேச செயலகம் | மோட்டார் சைக்கிள்கள் | 02 | 03 ஆண்டுகள் |
| லுணுகம்வெஹெர பிரதேச செயலகம் | மோட்டார் சைக்கிள் | 01 | 03 ஆண்டுகள் |

**(இ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான கட்டிடமொன்று மற்றும் லுணுகம்வெஹெர பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான வேறொரு கட்டிடமொன்று என்பன 5 வெவ்வேறு அரசாங்க நிறுவனங்களிற்கு முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்டிருந்தன.

**(ஈ) முறையாக கையேற்கப்படாத சொத்துக்கள்**

மாவட்டச் செயலகத்திற்கு 2013 மற்றும் 2014 இன் வருடாந்த மதிப்பீடுகளின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 41,538,234 தொகை செலவிடப்பட்டு 1.0366 ஹெக்ரயர் பரப்பளவான காணியின் பகுதியொன்றில் நிர்மாணிக்கப்பட்ட புதிய மாவட்டச் செயலாளரின் உத்தியோகபூர்வ விடுதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 நட்டங்களும் சேதங்களும்

1987 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியின் போது ஏற்பட்டிருந்த ரூபா 25,000 இற்கு மேற்பட்ட பெறுமதியுடைய 23 நிகழ்வுகளுடன் தொடர்புடைய ரூபா 10,305,337 கூட்டுத்தொகையான நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக கடிதக் கோவைகளின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.7 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

மாவட்டச் செயலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்காத பந்திகளிற்கான தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புபட்ட விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2007<br>2008 | 6 : 5<br>12 : 2 | சூரியவெவ மற்றும் லுணுகம்வெஹெர பிரதேச செயலகங்களில் அந்தப் பிரதேசத்திலுள்ள 110 வேலையற்ற இளைஞர்களுக்காக சாரதி பயிற்சிப் பாடசாலைகளுக்கு பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| 2012 ஒக்தோபர் 25 ஆம் திகதிய பொதுக் கணக்குகள் குழுக் கட்டளை | கட்டளை இலக்கம் 16 | அம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான காணியில் நிர்மாணிக்கப்பட்ட 22 விடுதிகள் மாவட்டச் செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2012 | 1.5 (அ) iii | அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தால் கிரிமெட்டிய உஸ்ஸான நீர் செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட பீவீசீ (PVC) குழாய்களிற்கான மேலதிகக் கொடுப்பனவு. |

**2.8 முகாமைத்துவப் பலவீனங்கள்**

---

தொடர்பாடல் வசதிகளை வழங்கும் 03 தனியார் நிறுவனங்களினால் அம்பாந்தோட்டை நிர்வாக தொகுதியில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த தொலைத்தொடர்புக் கோபுரங்களிற்காக அக் கோபுரங்கள் ஸ்தாபிக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் அறவிடப்படாத வாடகை ரூபா 1,065,375 தொகையாகவும் மின்சாரச் செலவினத்திற்கான நிலுவை ரூபா 727,215 தொகையாகவும் ரூபா 1,792,590 கூட்டுமொத்தத் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.9 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

---

அம்பாந்தோட்டை நிர்வாக தொகுதி காணியில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த இரண்டு மின்பிறப்பாக்கி இயந்திரங்களிற்கான எரிபொருள் பயன்பாட்டிற்காக பேணப்பட்டிருந்த நாளாந்த ஓட்டக் குறிப்பு பதிவேட்டின் பிரகாரம் 2016 ஏப்ரல் 27 தொடக்கம் 2017 திசெம்பர் 31 வரை 11,300 லீற்றர் எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மின்பிறப்பாக்கி இயந்திரங்களிற்காக 9,900 லீற்றர் எரிபொருளே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 133,000 பெறுமதியான 1,400 லீற்றர் எரிபொருள் பற்றாக்குறையோன்று அவதானிக்கப்பட்டது.

**2.10 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டை பயன்படுத்துதல்**

---

**2.10.1** 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியின் போது மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அவற்றின் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2013 | மீண்டுவருபவை | 650.87 | 650.56 | 0.31 | 0.04 |
| | மூலதனம் | 128.11 | 125.56 | 2.55 | 1.99 |
| | **மொத்தம்** | **778.98** | **776.12** | **2.86** | **0.37** |
| 2014 | மீண்டுவருபவை | 609.04 | 607.57 | 1.47 | 0.24 |
| | மூலதனம் | 395.70 | 395.49 | 0.21 | 0.05 |
| | **மொத்தம்** | **1,004.74** | **1,003.06** | **1.68** | **0.17** |
| 2015 | மீண்டுவருபவை | 695.65 | 690.02 | 5.63 | 0.81 |
| | மூலதனம் | 228.10 | 167.34 | 60.76 | 26.64 |
| | **மொத்தம்** | **923.75** | **857.36** | **66.39** | **7.19** |
| 2016 | மீண்டுவருபவை | 754.00 | 714.40 | 39.60 | 5.25 |
| | மூலதனம் | 113.00 | 108.60 | 4.40 | 3.89 |
| | **மொத்தம்** | **867.00** | **823.00** | **44.00** | **5.07** |
| 2017 | மீண்டுவருபவை | 753.74 | 727.48 | 26.26 | 3.48 |
| | மூலதனம் | 490.80 | 301.51 | 189.29 | 38.56 |
| | **மொத்தம்** | **1,244.54** | **1,028.99** | **215.55** | **17.31** |

மீளாய்வாண்டில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 9 செலவின விடயங்களிற்காக மிகை நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக அச் செலவின விடயங்களிற்கான நிதியேற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் ரூபா 4,065,234 கூட்டுத்தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அச் சேமிப்புக்கள் செலவின விடயங்களிற்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 15 சதவீதம் தொடக்கம் 68 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன.

**(ஆ) குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடுகளை நோக்கங்களிற்கு முரணான செயற்பாடுகளிற்கு பயன்படுத்துதல்**

---

மீளாய்வாண்டின் போது செலவின விடய இலக்கம் 263-1-1-2509 இன் கீழ் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனரமைப்பு மற்றும் மீள்நிர்மாண நடவடிக்கைகளிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 350,000,000 தொகையான குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடுகளில் ரூபா 1,834,901 தொகை செலவிடப்பட்டு அம்பாந்தோட்டை மாவட்ட திட்டமிடல் செயலகத்திற்கு அங்கீகாரமின்றி கணனிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

**(இ) மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல் மூலதனப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுதல்**

---

வருடாந்த மதிப்பீடுகளை தயாரிக்கும் போது மதிப்பீடு செய்யப்பட்டிராத 30 ரப் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,093,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் 35 கணனிகளை கொள்வனவு செய்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போது மடிக் கணனிகள் மற்றும் மேசைக் கணனிகளாக 85 கணனிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 9,648,700 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**(ஈ) குறைநிரப்பு மதிப்பீடுகளின் கீழான கட்டுநிதிகள் போதாமை**

---

வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக மாவட்டத்தில் சேதமடைந்த உட்கட்டமைப்புக்களை புனரமைப்பதற்காக ரூபா 350 மில்லியன் குறைநிரப்பு மதிப்பீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் போதியளவு கட்டுநிதி பெறப்படாததன் காரணமாக மீளாய்வாண்டில் ரூபா 181.4 மில்லியன் செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால் குறைநிரப்பு மதிப்பீடுகளிலிருந்து வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளில் 51 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

**2.10.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்.**

---

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய 28 அமைச்சுக்கள் மற்றும் 22 திணைக்களங்கள் என்பவற்றால் ரூபா 3,175,370,042 கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடுகள் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந் நிதியேற்பாடுகளில் முறையே ரூபா 2,410,747,449 மற்றும் ரூபா 238,386,824 ஆக ரூபா 2,649,134,273 கூட்டுமொத்தத் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு முறையே ரூபா 487,688,346 மற்றும் ரூபா 38,547,423 ஆக ரூபா 526,235,769 கூட்டுமொத்தத் தொகை அதாவது வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளில் முறையே 16 சதவீதமான மற்றும் 13 சதவீதமான தொகைகள் சேமிக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) லுணுகம்வெஹெர பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கந்தகஸ்மங்கட குடா கம்மான 2 இல் தெற்கு பக்க முடிவு பிரதான கால்வாயிலிருந்து தெற்கு திசையின் முதலாவது வீதி வரையான 2 ஆம் குறுக்கு வீதியில் இணைப்புக் கற்களை

பதிப்பதற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் ரூபா 1,250,000 நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. அந் நிதியேற்பாடுகளில் ரூபா 1,137,393 தொகை 2018 பெப்ரவரி 16 இல் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2018 ஏப்ரல் 24 இல் பௌதீக பரிசோதனையின் போது இணைப்புக் கற்கள் பதிக்கப்பட்ட வீதியின் மேற்பரப்பு மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டது.

(ஆ) மீன்பிடி மற்றும் நீர் வளங்கள் அமைச்சினால் வெவக் சமக கமக் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2017 இன் கீழ் திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவிற்கான 17 செயற்திட்டங்களிற்காக ரூபா 31,315,221 நிதியேற்பாடுகள் 04 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்தன. அச் செயற்திட்டங்களிலிருந்து ரூபா 21,121,159 நிதியேற்பாடுகளிற்குரிய 11 செயற்திட்டங்கள் கணக்காய்வுப் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது அவதானிக்கப்பட்ட பிரதான விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) மதிப்பீடுகளின் பிரகாரம் வீதிகளில் பதிக்கப்பட வேண்டிய இணைப்புக் கற்களின் வலிமை 30 $N/mm^2$ இற்கு மேற்பட்டிருக்க வேண்டிய போதிலும் கணக்காய்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட மேற்படி 11 வீதிகளில் பதிக்கப்பட்ட இணைப்புக் கற்களின் வலிமை எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விட 17 சதவீதம் தொடக்கம் 78 சதவீதம் வரையான வீச்சில் குறைவடைந்திருந்தது.

(ii) அவ் நிர்மாணங்களின் போது எக்கமுதுகமவிலுள்ள விக்கிரமபாகு மாவத்தை, ரஜாயி ராஜசிங்ஹ மாவத்தை மற்றும் கொவிபல மாவத்தை என்பவற்றின் வீதி நிர்மாண நடவடிக்கைகளின் போது மாத்தறை உள்ளூராட்சித் திணைக்களம் தர பரிசோதனைக்கூடத்திலிருந்து கோரப்பட்ட தர அறிக்கைகளின் பெறுபேறுகள் புறக்கணிக்கப்பட்டிருந்தன. பின்னர் தங்கல்ல வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தர பரிசோதனைக்கூடத்திலிருந்து எடுக்கப்பட்ட தர அறிக்கையை பயன்படுத்தி நியமத்தரமில்லாமல் நிர்மாணிக்கப்பட்ட மேற்படி 3 வீதிகளிற்கான ரூபா 5,242,318 தொகை உள்ளடங்கலாக 11 வீதி நிர்மாணங்களிற்காக ரூபா 16,615,873 கூட்டுமொத்தத் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) நதிகம்வில தெவட்ட வீதியில் இணைப்புக் கற்களை பதிப்பதற்கான ரூபா 1,999,942 மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 2017 திசெம்பர் 13 இல் கிராமிய அமைப்பொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந் நிர்மாணங்கள் 2018 சனவரி 16 மற்றும் 23 இல் பரீட்சிக்கப்பட்டதுடன் நிர்மாண நடவடிக்கைகள் ஒப்பந்ததாரரால் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையில்லாமல் அவரது சொந்த தற்றுணிவில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. களப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட 2018 சனவரி 16 ஆம் திகதி வரை வீதியில் இணைப்புக் கற்களை பதித்தல் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் 2017 திசெம்பர் திகதியிடப்படாத கடிதத்தின் மூலம் பிரதேச செயலாளரால் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையில்லாமல் தரப் பரீட்சிப்பிற்காக இணைப்புக் கற்களின் மாதிரிகள் தர ஆய்வுகூடத்திற்கு நெறிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) மீன்பிடி மற்றும் நீர் வளங்கள் அமைச்சின் நிதியேற்பாட்டின் மூலம் 100 மீன்பிடிப் படகுகளை நங்கூரமிடுவதற்கு லுணுகம்வெஹெர நீர்த்தேக்கத்தில் மீன்பிடிப் படகு இறங்குதுறையொன்றை நிர்மாணிப்பதற்காக 2016 நவம்பர் 21 இல் ரூபா 706,499 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட இவ் இறங்குதுறையில் மீன்பிடிப் படகுகள் நங்கூரமிடுவது சாத்தியமற்றிருந்ததுடன் இவ் இறங்குதுறையை நிர்மாணிக்கும் போது மீனவ சமுதாயத்தின் கருத்துரைகள் பெறப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் இரண்டு வேலை விடயங்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட மோசடியான அளவீட்டை அடிப்படையாகக்

கொண்டு ஒப்பந்ததாரரிற்கு ரூபா 429,162 தொகை மேலதிகமாச் செலுத்தப்பட்டிருந்தது. 2012 சனவரி 05 ஆம் திகதிய 01/2012 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.2(IV) ஆம் பந்தியடன் இணங்காமல் இந் நிர்மாணம் சமுதாய அடிப்படையிலான அமைப்பால் உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மீன்பிடி மற்றும் நீர் வளங்கள் அமைச்சின் நிதியேற்பாட்டின் மூலம் லுணுகம்வெஹெர பிரதேசத்தில் மீன் கடையொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 501,623 செலவிடப்பட்டிருந்தது. அதன் ஒப்பந்த செயற்பாடுகள் 2016 திசெம்பர் 29 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும் அது 2018 மார்ச் 28 வரையிலும் எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) லுணுகம்வெஹெர பேரூந்து நிலையத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்காக ரூபா 18,719,672 தொகைக்கு அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(i) இதற்காக 2015 ஆம் ஆண்டின் போது வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சின் நிதியேற்பாடுகளின் மூலமும் 2017 ஆம் ஆண்டின் போது உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிதியேற்பாடுகளின் மூலமும் முறையே ரூபா 13,613,542 மற்றும் ரூபா 3,820,461 ஆக ரூபா 17,434,003 கூட்டுமொத்த தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ii) எவ்வாறாயினும் இதற்கு மேலதிகமாக எந்தவொரு முறையான அங்கீகாரமும் இல்லாமல் கணக்காய்வுத் திகதியான 2017 ஆகஸ்ட் 02 வரை ரூபா 18.89 மில்லியன் மேலதிக மற்றும் வெளி வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவ் மேலதிக வேலைகளிற்காக மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அது ஆரம்ப மதிப்பீட்டுத் தொகையில் 97.53 சதவீதமாக இருந்தது.

(iii) 2017 ஆகஸ்ட் 02 வரையிலும் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு வேலைத்தளம் கையளிக்கப்பட்டிருக்காததுடன் 2016 ஒக்தோபர் 22 இன் பின்னர் ஒப்பந்தக் காலப்பகுதியின் நீடிப்பும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 1,942,074 இற்கான ஆரம்ப மதிப்பீட்டில் 30 வேலை விடயங்கள் 2017 ஆகஸ்ட் 7 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) இறுதி விலைப்பட்டியலின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வேலை விடய இலக்கம் O-3 இன் கீழ் ஆற்றப்பட்ட முழுமையான வேலை அளவு 4,428 சதுர மீற்றர்களாக காணப்பட்டது. இதற்காக இணங்கப்பட்ட ரூபா 3,600 அலகு விலையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 191.20 பெறுமதி சேர் வரி தொகை மற்றும் அதற்கான 30 சதவீத இலாபம் மற்றும் ரூபா 57.36 மேந்தலைக் கிரயம் ஆக ரூபா 248.56 ஐ கழித்ததன் பின்னர் இவ் வேலை விடயத்திற்காக செலுத்த வேண்டிய தொகை ரூபா 14,840,176 ஆக இருந்த போதிலும் இவ் வேலை விடயத்திற்காக ரூபா 19,694,608 தொகை செலுத்துவதற்காக பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க இவ் வேலை விடயத்திற்காக ரூபா 4,854,432 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- 200 மில்லிமீற்றர் ஏபீசீ கலவைக் கல் அடுக்கை இடுதல் மதிப்பிடப்பட்ட வேலை விடய இலக்கம் O-3 இல் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் ஏபீசீ கலவைக் கல்லின் 521.44 கியூபிக் மீற்றரிற்காக ரூபா 1,745,481 தொகை செலுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எடுக்கப்பட்ட ஆய்வுகூட அறிக்கையின் பிரகாரம் இடப்பட்ட ஏபீசீ கலவைக் கல் அடுக்கின் தடிப்புத்தன்மை

சராசரியாக 102 மில்லிமீற்றராக இருந்தமையால் வேலை விடய இலக்கம் O-3 இன் கீழ் செலுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்ட தொகையிலிருந்து மேலும் ரூபா 1,555,335 தொகை கழிக்கப்பட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- பேரூந்து நிலையத்தின் தரைகளில் பல இடங்களில் வெடிப்புக்கள் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் வெல்லவாய பக்கத்திலிருந்து பேரூந்து நிலைய உள்நுழைவு வரையான பெட்டி மதகின் மேற்பரப்பு வெடித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. மேலும் மிக உயர்வாக பேரூந்து நிலையத்தின் கூரை நிர்மாணிக்கப்பட்டதன் காரணமாக பேரூந்து நிலையத்தின் உட்பக்கம் மழை காலங்களில் மிகவும் ஈரலிப்பான நிலைமையில் காணப்பட்டது.

(உ) வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சின் நிதியேற்பாடுகள் மூலம் அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குருன்னஹெகே ஆர கிராம உத்தியோகத்தர் பிரிவில் டி-5 கால்வாய் பக்க சுவரின் 10 மீற்றர்களை புனரமைப்பதற்காக 2015 திசெம்பர் 31 இல் கமநல அமைப்பொன்றிற்கு ரூபா 980,340 தொகை செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாணத் திட்டமிடுதலில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக 2016 மே 10 இல் இப் பக்கச் சுவர் கால்வாய்க்குள் விழுந்திருந்தது. விழுந்த பக்கத்தின் மிகுதிச் சுவர் கணக்காய்வுத் திகதியான 2017 யூன் 01 வரையிலும் கால்வாயில் காணக்கூடியதாக இருந்ததுடன் நிர்மாணத்திற்காக செலுத்தப்பட்ட மேற்படி முழுத் தொகையும் பயனற்ற செலவினமாகியிருந்தது.

(ஊ) உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு என்பவற்றால் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் கள உத்தியோகத்தர்களிற்காக மோட்டார் சைக்கிள்களை வழங்குதல் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக மாவட்டத்திலுள்ள பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்ட கள உத்தியொகத்தர்களின் அடிப்படைத் தகவல்கள் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ii) 2017 ஏப்ரல் 30 இல் தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட, வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்களின் எண்ணிக்கைகள் மற்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் காட்டப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்களின் எண்ணிக்கைகள் என்பவற்றிற்கிடையே முறையே 348 மற்றும் 347 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(iii) 2014 யூன் 30 இல் உள்ளவாறு எஞ்சிய சேவைக் காலப்பகுதி ஒரு வருடத்திற்கு குறைவாக உள்ள உத்தியோகத்தர்களின் மோட்டார் சைக்கிள் ஒன்றிற்காக ரூபா 100,000 தொகை அறவிடப்பட வேண்டிய போதிலும் எஞ்சிய சேவைக் காலப்பகுதி ஒரு வருடத்தை விடக் குறைவாக உள்ள உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ரூபா 50,000 மாத்திரம் அறவிடுவதன் மூலம் திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்தால் மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டிருந்தன.

(iv) 05 ஆண்டுகள் பூர்த்தியடையும் வரை ஒவ்வொரு உத்தியோகத்தர் தொடர்பாக வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிளின் அனைத்து விபரங்களையும் உள்ளடக்கிய கோவையொன்று பேணப்பட வேண்டிய போதிலும் எந்தவொரு அலுவலகமும் அத்தகைய கோவைகளை பேணியிருக்கவில்லை.

(v) மோட்டார் சைக்கிள்களைப் பெற்ற உத்தியோகத்தர் 05 ஆண்டுகளை பூர்த்தி செய்வதற்கு முன்னர் சம்பளமற்ற விடுமுறை அல்லது 06 மாதங்களிற்கு மேலாக சம்பளத்துடனான விடுமுறையில் வெளிநாடு சென்றால் மோட்டார் சைக்கிளின் சந்தைப் பெறுமதி அறவிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு வெளிநாட்டிலுள்ள 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 869,520 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(vi) மோட்டார் சைக்கிள்களைப் பெற்ற உத்தியோகத்தர் 05 ஆண்டுகளை பூர்த்தி செய்வதற்கு முன்னர் மோட்டர் சைக்கிள் உரித்தற்ற பதவியொன்றிற்கு கடமைப்பொறுப்பு ஒதுக்கப்படும் போது அல்லது பதவியை இராஜினாமா செய்யும் போது மோட்டார் சைக்கிளின் சந்தைப் பெறுமதி அறவிடப்பட வேண்டிய போதிலும் மோட்டர் சைக்கிள் உரித்தற்ற பதவிகளிற்கு நியமனம் செய்யப்பட்ட 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,046,520 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(vii) இவ் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனைத்து மோட்டார் சைக்கிள்களும் 5 ஆண்டுகள் பூர்த்தியடையும் வரை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அல்லது தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திலிருந்து முழுமையான காப்புறுதியை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அதிகமான உத்தியோகத்தர்கள் இதனுடன் இணங்காமல் மூன்றாம் தரப்புக் காப்புறுதியை எடுத்திருந்தனர். இது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எந்தவொரு பிரதேச செயலகத்தாலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.10.3 அமைச்சின் நிதியேற்பாடுகளின் கீழ் அமுலப்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்கள்

முறையாக அங்கீகரிக்கப்பட்டிருக்காத மற்றும் அமுலப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட வேலை விடயங்கள் தொடர்பாக பொருத்தமற்ற விலைவீதங்களில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதன் காரணமாக 2016 ஆம் ஆண்டில் அம்பாந்தோட்டை பிரதேச செயலாளரிற்கு 03 வரிசை அமைச்சுக்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் அடிப்படையில் அமுலப்படுத்தப்பட்ட 264 வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்களில் ரூபா 43,770,611 தொகை மற்றும் நிதி வழங்கும் நிறுவனங்கள் சரியாக குறிப்பிடப்பட்டிருக்காது திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்தின் ஊடாக அமுலப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 6,423,048 தொகை ஆக ரூபா 50,193,659 கூட்டுமொத்தத் தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்தின் ஊடாக அமுலப்படுத்தப்பட்ட 17 செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.11 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 26301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 73.00 | 70.39 | 41.00 | 41.58 | 212.00 | 781.50 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவையாக இருந்த கடன் மீதிகள் அறவீடு செய்யப்படாமை**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுமொத்தத் தொகை ரூபா 1,825,038 ஆக காணப்பட்டதுடன் அந் நிலுவைக் கடன் மீதிகள் 01 ஆண்டு முதல் 22 ஆண்டுகள் வரையான காலவீச்சில் காணப்பட்டன.

**2.12 பொது வைப்புக் கணக்கு**

ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் பல்வேறு செயற்பாடுகளிற்காக 2016 ஆம் ஆண்டில் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,998,390 தொகை உரிய செயற்பாடுகளை நிறைவேற்றாமல் வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

**2.13 இணங்காமைகள்**

**2.13.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.11 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் 10 நிர்மாண ஒப்பந்தங்களிற்காக பெறப்பட வேண்டிய வரி விலைப்பட்டியல்களை பெற்றுக்கொள்ளாமல் திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்தினால் ஒப்பந்ததாரர்களிற்கு ரூபா 1,328,207 தொகையான வற் செலுத்தப்பட்டிருந்தது.

**2.14 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக தயாரிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் மாவட்டச் செயலகம் மற்றும் 08 பிரதேச செயலகங்களில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் வருமானங்களை கணக்காய்வு செய்தல் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**2.15 மனித வளங்கள் முகாமைத்துவம்**

மேலே 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளவாறான, வெற்றிடமான மற்றும் மேலதிக பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 573.68 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் ஒரு நபருக்கான செலவினம் ரூபா 479,262 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 47 | 43 | 04 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 32 | 18 | 15 | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iii) | இரண்டாம் நிலை | 1,120 | 1,033 | 126 | 39 |
| (iv) | ஆரம்ப நிலை | 115 | 103 | 13 | 01 |
| | | -------- | -------- | --------- | --------- |
| | **மொத்தம்** | **1,314** | **1,197** | **158** | **41** |
| | | ===== | ===== | ===== | ===== |

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு 158 பதவியணி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 41 மேலதிக பதவியணியினர் காணப்பட்டனர். உரிய தரங்களிற்கான உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படாததால் மேற்படி மிகைகள் ஏற்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் உள்ளவாறான வெற்றிடங்களின் எண்ணிக்கை 117 ஆகும். அவ் வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ் மேலதிக பதவியணியினர் நிரந்தர உத்தியோகத்தர்களாக காணப்பட்டதுடன் வெற்றிடமான பதவிகளின் கடமைகளை மேவுகை செய்வதற்காக மேலதிக பதவியணியினரிற்கு பணிப்பொறுப்பு ஒதுக்கப்பட்டிருந்ததென 2018 யூலை 04 இல் கணக்காய்விற்கு அறியத்தரப்பட்டிருந்தது.

**2.16 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்**

அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 05 பிரதேச செயலகங்களில் பிணை செலுத்த வேண்டிய 73 உத்தியோகத்தர்களினால் ரூபா 168,400 தொகையான பிணை பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.